# நிக்கலோ மாக்கியவல்லியின் ஆட்சியாளனை மையப்படுத்திய அரசியல் சிந்தனைகள் – ஒரு மெய்யியல் நோக்கு

மாரிமுத்து பிரகாஷன்

*தத்துவவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்*

*தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை*

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**

சிறந்த அரசு ஒன்றின் உருவாக்கம் தொடர்பில் வரலாற்று ரீதியாக பல்வேறு சிந்தனைகள் நடைமுறை அனுபவங்களை உள்வாங்கி தத்துவார்த்த ரீதியாக முன்வைக்கப்பட்டுள்ளன. மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் பிளேட்டோவினால் இலட்சிய அரசு தொடர்பான வெளிப்படுத்தல்களுடன் தொடங்கும் இம் முயற்சிகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிக்கலோ மாக்கியவல்லியினால் இளவரசன் நூலில் சர்வ அதிகாரங்களும் கொண்ட ஆட்சியாளனால் கட்டமைக்கப்படக்கூடிய ஏகாதிபத்திய அரசு ஒன்றின் உருவாக்கம்; தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சிந்தனைகள் முக்கியத்துவம் கொண்டவையாக உள்ளன. 'ஆட்சியாளனின் எல்லையற்ற அதிகாரத்தின் ஊடான அரசியல் நிர்வாகம் வழிநடாத்தப்படுதல்' என்று தன்னுடைய இறுதியான இலக்கினை நிர்ணயித்து அதனை அடைவதிலும், தொடர்ந்து பேணுவதிலும் பின்பற்றுவதற்காக பல்வேறு வழிமுறைகளை வரலாற்று உதாரணங்களை தொகுத்துக் கூறியுள்ளார். இந்த பின்னனியில் குறித்த இந்த ஆய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி பண்பு சார்ந்ததாக மாக்கியவல்லியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அரசியல் சிந்தனைகளை தர்க்க மற்றும் ஒழுக்கவியல் ரீதியாக நுணுக்கமான பகுப்பாய்வுக்கு உள்ளாக்கி வாசகர்களுக்கு சமர்ப்பிப்பதாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்**: அரசியல் மெய்யியல், மாக்கியவல்லி, அரசியல் யதார்த்தவாதம், இளவரசன்

## ஆய்வு அறிமுகம்

அரசியல் யதார்த்தவாதத்தின் (Political Realism) அடிப்படையில் ஏகாதிபத்திய அரசினை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு வெளிப்படுத்தப்பட்ட சிந்தனையாக மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலத்தில்

இத்தாலியில் வாழ்ந்த அரசியல் அறிஞரான நிக்கலோ மாக்கியவல்லியினால் (Niccolò di Bernardo dei Machiavelli 1469 – 1527) எழுதப்பட்ட இளவரசன் *(The Prince)* நூல் அமைந்துள்ளது செல்வ வளமும், அரசியல் செல்வாக்கும் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர் இயல்பாகவே அமையப்பெற்ற அறிவாற்றலின் துணையுடன் புளோரன்டின் குடியரசியல் (Republic of Florentine) இராஜதந்திரி, செயலாளர், தூதுவர் என பல்வேறு உயர்நிலைப் பதவிகளை வகித்துள்ளார். இக் காலத்தில் இத்தாலியின் புளோரன்ஸ் உள்ளடங்களாக மிலான், வெனிஸ், நெப்லஸ் என இருந்த பல்வேறு நகர அரசுகளிடையே இத்தாலியை முழுமையாக கட்டுப்படுத்தி ஆட்சி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அரசியல் குழப்ப நிலைகளும் யுத்தங்களும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இதன் ஒரு பகுதியாக புளோரன்ஸ் அரசில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் காரணமாக தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு நாடுகடத்தப்பட்ட நிலையில் பல்வேறு சிற்றரசுகளாக பிரிந்து கிடந்த இத்தாலியினை ஒன்றினைத்து பலம் மிக்க ஒரு பேரரசாக உருவாக்கும் நோக்கத்துடன் வரலாற்று உதாரணங்களையும் தன்னுடைய வாழ்வின் அரசியல் அனுபவங்களையும் ஒன்று சேர்த்து எழுதப்பட்டதாகவே இந்நூல் உள்ளது.

இதில் அக் காலத்தில் பெரும் செல்வாக்குடன் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய கிறிஸ்தவ சமயத்தின் பிடியில் இருந்து விடுபட்டு சுதந்திரமானதும் ஆட்சியாளனை மையமாகக் கொண்ட சமயச்சார்பற்றதுமான சாம்ராஜ்ஜியத்தினை உருவாக்குவது முதன்மையான இலக்காக வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனினும் புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தில் ஆலோசகர் பதவியினை பெற்றுக்கொள்வது உள்நோக்கமாக இருந்தமையினால் புளோரன்சின் ஆட்சியாளராக இருந்த லோரன்சோ டி மெடிசியினை இலக்காகக் கொண்டு இது எழுதப்பட்டது என்பதும் ஆனால் அது வெற்றியளிக்காமல் போனதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இத்தகைய நோக்கங்களைக் கொண்டுள்ளமையினாலேயே இந்நூல் ஒரு கொள்கையாக முன்வைக்கப்படாமல் ஆட்சியாளனுக்குரிய நடைமுறை வழிகாட்டியாக வடிவமைக்கப்பட்டுள்ளது இந் நூல் குறித்த ஆட்சியாளருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டு அவர் அதனை பின்பற்றுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதன் ஊடாக ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலியில் வழுவான ஆட்சியினை ஏற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளமையினை அறிந்துகொள்ள முடிகின்றது. இந்த பின்னனியில் குறித்த இந்த ஆய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி பண்பு சார்ந்து மேற்கொள்ளப்பட்டு மாக்கியவல்லியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அரசியல் சிந்தனைகளை நுணுக்கமான பகுப்பாய்வுக்கு உள்ளாக்கி மதிப்பீடு செய்து வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## இளவரசன் நூல் கட்டமைப்பு

ஆட்சியாளனுடைய இலக்கினை இறுதியான இலக்கினை அமைந்துகொள்வதற்காக எந்தவொரு செயற்பாட்டினையும் அது பொது ஒழுக்கத்திற்கு முரணானதாக இருப்பினும் கூட பின்பற்றுவதற்கு அனுமதிக்கின்ற, ஊக்குவிக்கின்ற இளவரசன் நூல் புளோரன்ஸ் தேசத்தின் ஆட்சியாளராக இருந்த லோறென்சோ டி மெடிசிக்கு அறிமுகக் கடிதம் ஒன்றினை முதலாகவதாகவும் தொடர்ந்து இருபத்து ஆறு அத்தியாயங்களையும் உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது.

## ஆட்சி உருவாக்கம்தொடர்பானசிந்தனைகள்

அடிப்படையில் தனியொரு ஆட்சியாளனிடம் அதிகாரங்களைக் குவித்து மேற்கொள்ளப்படக் கூடிய அரசாட்சி முறை தொடர்பான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசு ஒன்று பரம்பரையாகவோ அல்லது யுத்தம் செய்து கைப்பற்றப்படுவதன் ஊடாகவோ அடையப்பட முடியும். இவ்வாறு புதிதாக அமைக்கப்படும் அரசினை ஸ்திரமாக பேணுவதற்காக அங்கு ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் முற்றாக இல்லாதொழிக்கப்படுவதும் குறிப்பிட்ட காலத்திற்கு இளவரசன் அங்கு தங்கியிருப்பதும் அவசியமானது. பின்னர் அமைச்சர்களையோ பிரதிநிதிகளை நியமிப்பதன் ஊடாகவோ அவற்றினை பரிபாலனம் செய்துகொள்ள முடியும்.

ஆட்சியாளனாதும் வாய்ப்பு ஒருவருக்கு அதிஸ்டத்தினாலோ, சுய திறமையினாலோ, கொடுமைகளை மேற்கொண்டோ, யுத்தம் செய்வதன் ஊடாகவோ, பிறரை வஞ்சித்து ஏமாற்றுவதன் ஊடாகவே கூட கிடைக்கக்கூடியதாகும் இவை ஒவ்வொன்றிலும் சாதகங்களும் பாதகங்களும் நிறைந்துள்ளன. பிறரை ஏமாற்றி ஒருவர் அதிகாரத்தை பெற முடியும் எனினும் அதன் ஊடாக அவர் கௌரவத்தையும் புகழினையும் பெற முடியாது என்பது கவனத்திற்குரியதாகும் எவ்வாறாயினும் ஆட்சியமைக்கும்போது அவன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவனாகின்றான் என்பதுடன் அவன் பின்பற்றிய முறைகளும் பிற்காலத்தில் பொருத்தமானவையாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இக் காரணத்தையிட்டு வன்முறைகளும், கொடூரங்களும் பின்பற்றப்பட வேண்டும் எனும்போது அதனை ஆரம்பகட்டத்தில் தேவையான அளவிற்கு ஒரே தடவையில் செய்து முடித்துவிட வேண்டும் மாறாக சிறிது சிறிதாக தொடர்;ச்சியாக செய்துகொண்டிருக்கக்கூடாது அதுபோல நன்மைகளை சிறிது சிறிதாக நீண்டகாலத்திற்கு தொடர்ச்சியாக செய்ய வேண்டும். இதன்போது மக்கள் பழைய கொடுமைகளை படிப்படியாக மறந்து புதிய ஆட்சியாளனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கு ஆரம்பித்து விடுவார்கள்

இன்னுமொரு வகையான ஆட்சி உருவாக்கம் குடிமக்களது ஆதரவுடன் உருவாக்கப்படுவதாகும் இது அரசியலமைப்புரீதியான அரசமைப்பு (Constitutional Principalities) என்று குறிப்பிடப்படுகின்றது இதில் சாதாரண குடிமக்கள், உயர்குடிப் பிறந்தோர் என இரண்டு தரப்பினர் உள்ளடங்குகின்றனர். இளவரசன் ஒருவன் முதலாவது வகையினருடன் நட்புறவாக இருப்பது தன்னை பாதுகாத்துக்கொள்வதற்கு அவசியமான முன்நிபந்தனையாகும் இதன்போது இரண்டாவது தரப்பினர் தீங்கு செய்ய முயற்சித்தாலும் தனக்கான பாதுகாப்பை முதலாவது தரப்பினர் ஊடாக உறுதி செய்துகொள்ள முடியும்.

### மனித இயல்பு தொடர்பானசிந்தனைகள்

மனிதர்களை நிர்வகித்து மேற்கொள்ளும் அரசியல் செயற்பாட்டில் அவர்களது இயல்புகளை அறிந்துகொண்டிருப்பது முதன்மையானதாக உள்ளது. இங்கு மனிதர்கள் நான்கு பண்புகளைக் கொண்டவர்களாக உள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது முதலாவது தன்னலக்காரர்கள் அதாவது விதிவிலக்காக ஒரு சில மனிதர்களைத்தவிர பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய நலன்களை முதன்மையாகக் கருதி செயற்படுபவர்களாகவும் ஏதேனும் நன்மைகள் கிடைக்கும் என்றால் மாத்திரமே அத்தகைய இயல்பில் மாற்றத்தை வெளிப்படுத்துபவர்களாகவும் உள்ளனர். இரண்டாவது அச்ச உணர்வு கொண்டவர்கள் அதாவது ஏனைய மனிதர்களினால் தன்னுடைய நலன் பாதிப்புக்கு உள்ளாகிவிடும் என்கின்ற உணர்வு அனைத்து மனிதர்களிடமும் உள்ளது என்றும் அன்பு பாசம், காதல், நட்பு என்பவை எல்லாம் வெளித்தோற்றத்தில் மாத்திரமே உள்ளன. மூன்றாவது அறியாமையில் இருப்பவர்கள் அதாவது புறத்தோற்றங்களை நம்பி முடிவுகளை எடுத்துச் செயற்படுபவர்களாக உள்ளனரே தவிர ஆழமான அறிவின் ஊடாக உண்மையினை அறிந்துகொண்டு செயற்படுபவர்களாக இல்லை. நான்காவது பொருளாசை கொண்டவர்கள் அதாவது செல்வத்தை பெருக்கிக்கொள்ள ஆசைப்படுபவர்களாக அதற்காக எந்த உறவையும் இழப்பதற்கு தயாராக இருப்பவர்களாக உள்ளனர். இத்தகைய அறியாமையும், வஞ்சக உள்ளமும் கொண்டவர்களை நம்பி நட்புக்கொள்வதோ அல்லது வெளிப்படையாக வெறுத்து பகைத்துக்கொள்வதோ நல்ல விளைவுகளை கொண்டுவராது.

இத்தகையவர்களை நீதி, நியாயம், அறம் என்பவற்றினூடாக ஆட்சி செய்வது இயலாதது. இதற்கு அவசியமாக உள்ளது எல்லாம் சர்வவல்லமை கொண்ட அதிகாரமே என்று மாக்கியவல்லி குறிப்பிடுவதானது அரசமைப்பதன் நோக்கம் மக்களது நலனை பேணுவதற்காக அல்ல மாறாக ஆட்சியாளன் அதிகாரத்தினை

நிலைநிறுத்தி தன்னுடைய நலன்களை பாதுகாத்துக்கொள்வதற்கேயாகும் என்பதனை வெளிப்படுத்துகின்றது இதன்பொருட்டு உள்நாட்டில் ஏற்படக்கூடிய புரட்சிகளை கடுமையான முறைகளை பின்பற்றி அடக்குவதற்கும், வெளியில் இருந்து வருகின்ற படையெடுப்புக்களை எதிர்கொள்வதற்காக தயார்நிலையில் இருப்பதன் அவசியத்தினையும் வலியுறுத்துகின்றார்.

## குடிமக்களது நலன்கள் தொடர்பான சிந்தனைகள்

ஆட்சியாளனால் குடிமக்களது நலன்கள் பேணப்பட வேண்டும் என்றோ அதற்கான வழிமுறைகள் பற்றியோ மாக்கியவல்லி முக்கியத்துவம் கொடுக்கவில்லை மாறாக ஆட்சியாளனுடைய அதிகாரத்தினை தக்கவைத்துக்கொள்ளுதல், அவர்களுடைய நலன்களை பாதுகாத்துக் கொள்ளுதல் என்பனவே முக்கியத்துவப் படுத்தப்படுகின்றன. இதற்காக மக்களை தந்திரமாக ஏமாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக பத்தாவது அத்தியாயத்தில் அரசு வேறு நாடுகளின் முற்றுகைக்குள் இருக்கின்றபோது பாதுகாப்பு அரணிற்குள் உள்ள மக்கள் வெளியில் உள்ள தங்களது உடமைகள் அழிக்கப்படுவதனையிட்டு ஆட்சியாளன் மீது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு ஆரம்பிப்பார்களாயின் அவர்களை சமாதானப்படுத்துவதற்காக தன்னுடைய கரிசனை எப்போதும் அவர்கள் மீது உண்டு என்றும், தற்போது ஏற்பட்டுள்ள துன்பம் தற்காலிகமானது, மக்கள் ஒன்றினைந்து செயற்படுவதன் ஊடாக விரைவிலேயே அதனை சரிசெய்து விடலாம் என்றும் நயமாக எடுத்துச்சொல்லி மக்களை தன்பக்கம் வைத்திருப்பதற்கான செயற்பாடுகளை ஆட்சியாளன் மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. இங்கு தேசப்பற்று (Pயவசழைவளைஅ) மக்களது பாதுகாப்பு மற்றும் மகிழ்ச்சி என்பதற்காக அல்லாமல் ஆட்சியாளனுக்காக சூட்சுமமான வகையில் பயன்படுத்தப்படுவதற்கான வழிகாட்டலே வழங்கப்படுவதாக உள்ளது.

குடிமக்கள் எந்தவொரு தொழிலையும் மேற்கொள்வதற்கான அமைதியான சூழலையும், பெருமளவில் முதலீடுகள் செய்யும்போது அவை அரசினால் கையகப்படுத்தப்படலாம், இலாபத்தில் பெருமளவு வரியாக செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்ற அச்சங்கள் இன்றி பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக வியாபார, முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான பொருத்தமான சூழலையும் உறுதி செய்வது ஆட்சியாளனது கடமையாக குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக அரசிற்கும், அரசாங்கத்திற்கும் நன்மைகளை கொண்டுவரக்கூடிய முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்பவர்களை ஊக்குவிப்பதும் அவர்களுக்கு மானியங்களை வழங்குவதும் அவசியமாக உள்ளது. இவை அனைத்தும்

தேசத்தினதும், ஒவ்வொரு குடிமக்களதும் நலன்களை பேணுவதற்கு இன்றியமையாதவையாகும்

## படைபலம், தேசிய பாதுகாப்பு சட்ட ஒழுங்கும் நீதியும்

பலமான தேசத்தினுடைய இரண்டு தூண்களாக முறையான சட்டங்களும் வலிமையான இராணுவமும் குறிப்பிடப்படுகின்றன. இராணுவம் இல்லாது சட்டம் நடைமுறைப்படுத்தப்பட முடியாது, இராணுவம் உள்ளது எனில் அங்கு சட்டம் ஒழுங்காக இருக்கும் என்று குறிப்பிடுவதன் ஊடாக இராணுவத்தின் முக்கியத்துவம் முதன்மைப்படுத்தப்படுகின்றது (the presence of sound military forces indicates the presence of sound laws). கூலிப்படைகள் (Mercenary Army), துணைப்படைகள் (Auxiliary Army) என்பன அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்த காலப்பகுதியில் அதனால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை கருத்தில் கொண்டு ஆட்சியாளன் தனக்கு விசுவாசமாக நடந்துகொள்ளக்கூடியதாக சொந்தமான இராணுவத்தினை கட்டமைப்பது அவசியமானது என்றும் அதுவே ஒரு ஆட்சியாளன் தன்னை நீண்டகாலத்திற்கு பாதுகாத்துக்கொள்வதற்கு உகந்தது என்றும் குறிப்பிடப்படுகின்றது. இது தொடர்பான விளக்கத்தின்போது முன்னைய இரண்டு படைகளையும் நம்புவது ஒருவர் அதிஸ்டத்தை நம்பி செயற்படுவது போன்றதாகும் மாறாக சொந்த படைகளை பயன்படுத்துவதே ஒருவர் தன்னுடைய இயலுமையின் அடிப்படையில் செயற்பட்டு வெற்றி பெறுவதற்கு சமமானது என்றும் எனவே நிலையாமைத்தன்மை உள்ளமையினை அறிந்துகொண்ட ஒருவர் அதனை மாற்றி அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

போர்க்கலையில் தேர்ச்சி பெற்றிருப்பதே ஒரு நாட்டினை கட்டமைப்பதற்கு மிக அவசியமான தகுதியாகும். இதனால் இத்தேர்ச்சியற்ற ஒரு ஆட்சியாளன் தன்னுடைய படைகளை நிர்வகித்து ஆட்சி செலுத்த முயற்சிப்பது ஆயுதங்கள் அற்ற ஒருவர் ஆயுதங்களுடன் இருப்பவர்களை வழிநடத்த முயற்சிப்பதற்கு சமமானது என்று குறிப்பிடப்படுகின்றது. இதில் தேசங்களின் புவியியல் அம்சங்கள், கடந்தகால அரசியல் வரலாறுகள் என்பவற்றினை கற்றுக்கொள்வதும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விடயமானது ஒரு ஆட்சியாளனுக்கு இருக்க வேண்டியு பண்புகள் மற்றும் தகுதிகள் என்பன பற்றிய வெளிப்படுத்தலாகவும் நோக்கப்பட வேண்டியதாகும். இது ஆட்சியாளன் வலுப்பிரயோகம், பயத்தை ஏற்படுத்துதல் என்பவற்றின் ஊடாக தன்னுடைய ஆட்சியில் சட்ட ஒழுங்கையும், நீதியினையும் நிலைபெறச் செய்ய முடியும் என்ற கருத்தினை உறுதி செய்வதாக உள்ளது.

அதுபோல யுத்தம் ஏற்படுகின்றபோது பொருத்தமான ஒரு அணியில் இணைந்து செயற்படுவது அவசியமான ஒன்றாகவும் பெருமையினை பெற்றுத்தரக்கூடிய ஒன்றாகவும் குறிப்பிடப்படுகின்றது இரண்டு அணிகள் யுத்தத்தில் ஈடுபடுகின்றபோது இருவருக்கும் உதவி செய்யாமல் நடுவு நிலைமை வகிப்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லை நட்பில் இல்லாதவர்கள் நடுவுநிலைமை வகிப்பதனை ஏற்றுக்கொண்டாலும் நட்பு நாடுகள் எப்போதும் தங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பினைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். இந்த நிலையில் நடுவுநிலைமை வகிப்பதானது ஆபத்தில் இருந்து தற்காலியமான பாதுகாப்பினை வழங்குவதாக இருக்கும் ஆனால் நீண்டகாலத்திற்கு மனவருத்தத்தினை ஏற்படுத்துவதாக இருக்கும். எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துணிவுடன் வெளிப்படையாக பொருத்தமான அணியுடன் இணைந்து செயற்படுவது அவசியமாக உள்ளது.

## ஆட்சியாளனுக்குஅவசியமானபண்புகளும்பின்பற்றவேண்டியசெயற்பாடுகளும்

இதுவரை காலமும் இலட்சியபூர்வமான முன்வைக்கப்பட்ட கொள்கைகள் மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று குறிப்பிடுகின்றனவே தவிர எவ்வாறு வாழ்கின்றார்கள் என்று குறிப்பிடவில்லை. இவ்வாறு இலட்சியபூர்வமான வாழ்க்கையினை எவரொருவரும் முழுமையாக வாழ்வது இல்லை. மாறாக நடைமுறைப் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்காக சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் நடந்துகொள்கின்றனர். இந்நிலையில் ஆட்சியாளன் ஒருவன் மற்றவர்களை நிர்வகிக்கின்ற இடத்தில் இருப்பதனால் ஒழுக்கம் என்று கற்பிக்கப்படும் விடயங்களை பின்பற்றுவது சாத்தியமற்றதாகின்றது. இது அவன் தன்னுடைய இலக்கினை நிறைவேற்றுவதற்கு எவ்வாறு நடந்துகொள்வது அவசியமானதோ அவ்வாறே நடந்துகொள்வதற்குரிய சுதந்திரத்தினை வேண்டிநிற்கின்றது. எனவே அவன் ஒழுக்க ரீதியானவனாக இருப்பதனைவிட ஒழுக்கமுடையவனாக தோற்றமளிப்பது போதுமானது என்று குறிப்பிடப்படுகின்றது. அடுத்ததாக நாட்டினுடைய செல்வளங்களை பயன்படுத்துவதில் தாராளத்தன்மையினைவிட சிக்கனமாக நடந்துகொள்வது அவசியமாக உள்ளது. தாராளமாக நடந்துகொள்பவர்கள் ஆரம்பநிலையில் மக்களினால் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் காலப்போக்கில் நாட்டினை நிர்வகிப்பதற்காக அதிகமான வரி அறவிடலை மேற்கொள்ள வேண்டியிருக்கும் நிலையில் தூற்றப்படுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும். ஆனால் சிக்கனமான செயற்பாடுகள் மக்கள்மீது சுமையினை ஏற்படுத்தும் வரிகளுக்கு வாய்ப்பினை வழங்காததனால் ஆட்சியாளன் தன்மீதான அபிமானத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

அடுத்ததாக அன்பு மற்றும் பயம் என்ற உணர்வுகள் தொடர்பாக பேசுகின்ற மாக்கியவல்லி ஒரு ஆட்சியாளன் மீது மக்கள் அன்புகொண்டவர்களாக இருப்பதனைவிட பயம் கொண்டவர்களாக இருப்பது நல்லது என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றார். இதற்காக ஆட்சியாளன் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றி மக்களை கட்டுப்படுத்தி ஆட்சி செய்ய வேண்டும். மக்கள் இயல்பாகவே சுயநல நாட்டம் கொண்டவர்கள். தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்றால்தான் அன்பு செலுத்துவார்கள். எவ்வளவுதான் அன்புகொண்டவர்களாக இருந்தாலும் தங்களது சொந்த நலன்கள் பாதிப்புக்கு உள்ளாகின்ற நிலை வருகின்றபோது ஆட்சியாளனை பாதுகாப்பதற்கு முயற்சிக்க மாட்டார்கள். ஆனால் பயம் என்பது எப்போதும் நிச்சயமான ஒன்று எனவே அதனைப் பயன்படுத்தியே ஆட்சியினை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் மக்கள் மீது அநியாயமான, அவர்களது வன்மத்தை வளர்க்கக்கூடியதான சொத்துக்களையும், பெண்களையும் பலாத்காரமாக எடுத்துக்கொள்ளும் செயற்பாடுகளை கண்டிப்பாக தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதற்காக இராணுவம் மிகவும் கண்டிப்புடன் குறிப்பாக மனிதாபிமானமற்ற கண்டிப்புடன் நடாத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

ஆட்சியினை நிலைநிறுத்துவதற்கு சட்டத்தின் பிரயோகமும், வழுப்பிரயோகமும் அவசியமாக உள்ளன. சட்டம் மனிதர்களினால் பின்பற்றப்படுவதாகவும், வழு விலங்குகளினால் பின்பற்றப்படுவதாகவும் உள்ள நிலையில் ஆட்சியாளன் பாதி மனிதனாகவும் பாதி விலங்காகவும் நடந்துகொள்வது அவசியமாக உள்ளது. விலங்குத்தன்மையில் ஓநாய்களை பயமுறுத்தி விரட்டுவதில் சிங்கமாகவும், பொறிகளுக்குள் அகப்பட்டுவிடாமல் இருப்பதில் நரியாகவும் செயற்பட வேண்டும். கொடுத்த வாக்கினை பாதுகாப்பது நல்லது என்று மெச்சப்பட்டாலும் ஆட்சியாளன் ஒருவன் தன்னுடைய வாக்கினைப் பயன்படுத்தி தன்னை சிக்கலுக்கு உள்ளாக்க முயற்சிக்கும்போதும், வாக்குறுதி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நன்மைகளை தொடர்ச்சியாக அனுபவிக்க முடியாத நிலையிலும் அவற்றினை மீறுவது அவசியமானதாகும். மனிதர்கள் இயல்பிலேயே சிறுமைப் பண்புகளைக் கொண்டவர்களாகவும், வஞ்சகர்களாகவும் இருப்பதனால் அவர்களை ஆளுகின்ற ஆட்சியாளன் அவ்விடயங்களின் தலைவனாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

ஒரு ஆட்சியாளன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் இகழப்படுவதற்கும், வெறுக்கப்படுவதற்கும் காரணமாக செயற்பாடுகளை மேற்கொள்வதில் இருந்து விலகியிருக்க வேண்டும். ஒழுக்கக்குறைபாடுடையவன்என்று விமர்சிக்கப்படலாம் ஆனால் வெறுக்கப்படக்கூடாது. இது வெளிநாட்டு படையெடுப்புக்களில் இருந்தும்,

உள்நாட்டு கிளர்ச்சிகளிலும் இருந்தும் பாதுகாத்துக்கொள்வதற்கு இன்றியமையாததாக உள்ளது. இதற்காகவே பிறருக்கே உரித்தான சொத்துக்களை, பெண்களை அபகரிப்பதனையும், பிறருடைய கௌரவத்தை குறைக்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதனை தவிர்க்க வேண்டும் என்றும் மக்களை பாதிக்கக்கூடிய சட்டங்களை பிறர் ஊடாகவும் சலுகைகளை வழங்கும் செயற்பாடுகளை நேரடியாகவும் மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### அமைச்சர்களைநியமித்தலும்ஆலோசனைபெறுதலும்

அமைச்சர்களே ஆட்சியாளனைப் பற்றிய அறிமுகத்தை புதியவர்களுக்கு வழங்கும் நிலையில் உள்ளனர் என்பதனால் அப் பதவிக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வது அவசியமாக உள்ளது. இவர்கள் தங்களது புகழை முதன்மைப்படுத்தி செயலாற்றுபவர்களாக அல்லாமல் நாட்டினையும் ஆட்சியாளனையும் முன்நிலைப்படுத்தி செயலாற்றுபவர்களாக இருக்க வேண்டும். சிறந்த அமைச்சர்களது விசுவாசத்தை பாராட்டி கௌரவிப்பதும், அன்பளிப்புக்கள், உயர்வான பெறுப்புக்கள் வழங்குவதும் அவசியமாக உள்ளது.

அமைச்சர்கள் அரசனது செயற்பாடுகளை நிறைவேற்றுபவர்களாக இருப்பதுடன் அவனுக்கு ஆலோசனை வழங்கும் இடத்திலும் உள்ளனர். இதற்காக அந்தரங்க தொடர்புகளை பேணிக்கொள்வது அவசியமாக உள்ளது. இந்த ஆலோசனைச் செயற்பாடுகளில் முகஸ்துதி செய்து பின்னர் ஆபத்துக்குள்ளாக்குகின்ற நிலைமை உள்ளடங்கியிருப்பதனால் ஆட்சியாளன் தான் உண்மையினை அறிந்துகொள்வதில்தான் அக்கரை கொண்டுள்ளமையினையும் எந்தவொரு உண்மையினை அறிந்துகொள்கின்றபோதும் அதனால் பாதிப்புக்கு உள்ளாகாத நிலையில் உள்ளமையினையும் வெளிப்படுத்தி அவசியமான விடயங்களை மாத்திரமே பேச வேண்டும் என்ற அறிவுரையினை நியமிக்கப்பட்டுள்ள ஞர்னமுள்ள ஆலோசகர்களுக்கு வழங்கியிருப்பது சிறந்தது. சிறந்த ஆலோசகர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் ஆட்சியாளான் தன்னைச்சுற்றியுள்ள உறவினர், நண்பர்களது பேச்சுக்களை கேட்கவேண்டிய நிலை உள்ளது ஆனால் அவை ஒவ்வொன்றும் சுயநலன் கருதிய உள்நோக்கங்களைக் கொண்டவையாகும் எனவே நடுவுநிலைமையான, நீண்டகால நன்மையினைத் தரக்கூடிய ஆலோசனைகளை பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. எனினும் தனக்கு தேவைப்படும்போது மாத்திரமே ஆலோசனை கேட்க வேண்டும் மாறாக தன்மீது ஆலோசனைகள் திணிக்கப்படுவதற்கு இடம் வழங்குதல் கூடாது. இவ்வாறு பெறும் ஆலோசனைகள் தொடர்பிலும் சந்தேகங்களை எழுப்பி கேள்விகள் கேட்டு தெளிவாக உறுதி செய்துகொள்ள வேண்டும் என்பதுடன்

உண்மைகளை மறைத்தல், அதிகப்படுத்திக்கூறுதல் என்பவற்றுக்கு தண்டனை வழங்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் நோக்குகின்றபோது ஆலோசனை வழங்குபவர்கள் எத்தகைய ஞானமுடையவர்களாக இருந்த போதிலும் ஆட்சியாளன் ஞானமற்றவன் எனில் அதனால் எந்த பயனும் இல்லை என்பதனால் அவன் தன்னளவில் மிகச் சிறந்த அறிவாற்றலைக் கொண்டவனாக இருப்பதும் அவசியமாக உள்ளது.

## முடிவுரை

ஆதி கிரேக்க காலத்தில் இருந்து தனி மனித மற்றும் சமூக ஒழுக்கத்துடன் தொடர்புபட்டதாக பேணப்பட்டு வந்த அரசியல் செயற்பாடுகளை அதிலிருந்து பிரித்து தனித்துவமான ஒன்றாக அணுகியமை இளவரசன் நூலின் புரட்சிகரமான அம்சமாக அமைந்துள்ளது. சமயங்களின் வழிகாட்டலோ ஒழுக்கத்தின் ஆளுகையோ இல்லாமல் ஆட்சியாளன் தன்னுடைய அதிகாரத்தையும் நலனையும் பேணிப்பாதுகாத்துக் கொண்டு தனக்கான அரசாங்கத்தை நடாத்துவதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப் பிரயோக வடிவில் உள்வாங்கியுள்ள நிலையில் மாக்கியவல்லியின் நோக்கம் அவர் இலக்காகக் கொண்ட பரம்பரை ஆட்சியாளர்களினால் சரியாக உள்வாங்கப்படாமல் போனதும், அவர் எதிர்பார்த்த அரசவைக்கான ஆலோசகர் பதவி கிடைக்காமல் போனதும், பெரும்பான்மையான மக்களினால் ஒழுக்கமற்ற, கொடுமையான, பொல்லாத சிந்தனைகளாக இவை விமர்சிக்கப்பட்டதும், பிற்காலத்தில் புளோரன்ஸ் நகரில் குடியரசு ஆட்சி நிலை நிறுத்தப்பட்ட பின்னர் மாக்கியவல்லி அதில் பதவியினை பெற்றுக்கொள்ள முயற்சித்தபோது நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டமையும் மனிதர்கள் இயற்கையாகவே நேர்நிலையான, உயர்வான ஒழுக்க விழுமியங்களையே மெச்சுபவர்களாக, பின்பற்றுபவர்களாக உள்ளனர் என்பதனை வெளிக்காட்டுவதாக உள்ளது. இது புலமைத்துவமான ஒரு படைப்பாக இருந்தாலும் அறிஞர்களினால் போற்றக்கூடிய ஒன்றாக இல்லை என்றே கூற வேண்டியுள்ளது. இதற்கு ஒரு அரசியல் வழிகாட்டல் நூல் என்ற வகையில் மக்களது நலன் தொடர்பான சிந்தனைகள் முன்வைக்கப்படாமல் மாக்கியவல்லி தனக்கான ஒரு வாய்ப்பினை அரசில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் ஆட்சியாளனை மையப்படுத்தி அவனது அதிகாரம் மற்றும் நலன்களை பாதுகாப்பதற்காகக பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளை வரலாற்று உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைத்து மக்களது நலனை ஆட்சியாளன் தீர்மானிக்கும் அளவிற்கு விட்டுவிடுவதே காரணமாக உள்ளது.

தான் ஏற்கனவே ஒரு குடியரசு ஆட்சியில் பொறுப்பான பதவியில் இருந்துள்ள போதிலும் இந் நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் குடியரசு ஆட்சி முறை

தொடர்பில் தான் விளக்கப்போவதில்லை என்றும் குடும்ப ஆட்சியின் ஊடாக தனிநபரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சி முறை தொடர்பாகவே பேசுவதாகவும், ஐந்தாவது அத்தியாயத்தில் ஏற்கனவே குடியரசாக இருந்த தேசங்களை இளவரசர்கள் கைப்பற்றும்போது அங்கிருந்த மக்கள் ஏற்கனவே அனுபவித்த சுதந்திரத்தை விரும்பும் காரணத்தினால் புதிய ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பினை வெளிக்காட்டுவது வழுவானதாக இருக்கும் என்பதனால் அதனை முற்றாக இல்லாதொழிப்பது அவசியமாக உள்ளது என்றும் குறிப்பிடுவதானது மிகவும் தெளிவான வகையில் அவர் அரசியல் பதவியினை அப்போது ஆட்சியில் இருந்த குடும்ப ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கினைக் கொண்டிருந்தமையினையும், எத்தகைய ஆட்சி மேற்கொள்ளப்படுகின்றது என்பது கவனத்தில் கொள்ளப்படாது அதிகாரம் தக்கவைக்கப்படுவதனையும், ஆட்சியாளர்களதும் அவர்களைச் சார்ந்தவர்களதும் சுயநலன்கள் பேணப்படுவதனையும் முதன்மைப்படுத்தப்படுவதனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஆட்சியாளன் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்காக குடிமக்கள் மீது மேற்கொள்ளக்கூடிய கொடுமையான செயற்பாடுகளை வரையறையற்றதாக அனுமதிக்கின்ற அதேவேளையில் அதற்காக கால எல்லை மட்டுப்படுத்தப்பட்டதாக ஆரம்பநிலையிலேயே மேற்கொண்டு முடித்துவிட வேண்டும் என்ற அறிவுறுத்தல் முன்வைக்கப்பட்டு அப்போது மக்கள் பழைய விடயங்களை மறந்து ஆட்சியாளனை படிப்படியாக ஏற்றுக்கொள்வதற்கு ஆரம்பிப்பார்கள் என்றும் இந்த வகையில் 'கொடுமை தீமையானது ஆனாலும் அவசியமானது' (Cruelty is a necessary evil)என்று குறிப்பிடப்படுவதானது அறநெறியினை அறிந்துகொண்ட ஆனால் செயற்படுகின்றபோது அதனை கவனத்தில் கொள்ளாத ஒரு மனப்பாங்கினையும், எதனையும் தனக்கு நடைமுறையில் பயன்தரக்கூடியதாக சிந்திக்கும், செயற்படும் மனப்பாங்கினையும் வெளிப்படுத்துவதாக உள்ளது (Amoral Pragmatism). இவ்விடயத்தினையே நற்பண்புகளுடன் நடந்துகொள்வது எல்லா சந்தர்ப்பங்களிலும் சாத்தியமற்றது என்பதனால் ஆட்சியாளன் தான் நற்பண்புகளைக் கொண்டவர் என்ற தோற்றத்தை மக்களிடையே வளர்த்தெடுப்பது அவசியமாக உள்ளது. இதன்போது அவன் செய்யக்கூடிய கொடூரமான செயற்பாடுகளும் அதற்குப் பின்னால் ஒரு நியாயமான காரணம் இருக்கும் என்ற எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்தும் என்பதனால் தன்னுடைய ஆட்சியினை நிலைநிறுத்திக்கொள்வது இலகுவானதாக இருக்கும் என்ற கருத்தும் உறுதிப்படுத்துகின்றது. இவ்விடயமானது படைபலம் எவ்வளவு இருந்தாலும் மக்களிடையே நன்மதிப்பினைப் பெற்றிருப்பது ஒருவர் தன்னுடைய ஆட்சியினை

தக்கவைத்துக்கொள்வதற்கு இன்றியமையாதது என்பதனை வெளிப்படுத்தவதாக உள்ளது.

மனிதர்கள் பலர் தம்மளவில் நற்பண்புகளைக் கொண்டிராதவர்களாக, கெடுதிகள் செய்வதன் ஊடாக நன்மையினை அனுபவிப்பவர்களாக இருக்கலாம் ஆனால் அவர்கள் உள்ளடங்களாக அனைவருமே நல்ஒழுக்கப் பண்புகளை விரும்புபவர்களாக, அத்தகைய தூய பண்புகளைக் கொண்டவர்களுடன் நட்புறவினை பேணுவதற்கு விரும்புபவர்களாக உள்ளனர் என்பதே உண்மையாகும். இவ்வாறான ஒரு நிலையில் வெறுமனே காட்சிக்கு நற்பண்புகளையுடையவனாக ஆட்சியாளன் செயற்பட்டு தன்னுடைய இலக்குகளை அடைந்துகொள்ள முயற்சிப்பது நீண்டகால அடிப்படையில் பயன்தராததாகும். ஏனெனில் மக்கள் தாங்கள் தீயவர்களாக இருப்பினும் தங்களை ஆழ்பவன் நற்பண்புகளின் இருப்பிடமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பினைக் கொண்டவர்கள்.

இறுதியாக பல்வேறு வரலாற்று நிகழ்வுகளையும், ஆட்சியாளர்களையும் உதாரணங்களாகக் கொண்டே இவ்வாறான ஒரு வழிகாட்டலை மாக்கியவல்லி ஆட்சியாளர்களுக்கு வழங்கியுள்ளார் என்பதனை அறிந்துகொள்கின்ற நிலையில் அந்த உதாரணங்களில் பயன்படுத்தப்படுபவர்கள் மக்களினால் சிறந்த ஆட்சியாளர்களாக அனைத்து காலங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் அல்ல குறித்த சில காலத்திற்கு அதிகாரத்தில் இருந்தாலும் பின்னர் அதிலிருந்து விலக்கப்பட்டவர்களும் உள்ளனர். இவ்வாறான முன்னுதாரணங்களைக் கொண்டு வழிகாட்டல்களை வழங்கியிருப்பதன் நோக்கம் அப்போது புளோரன்ஸ் நகரில் ஆட்சியில் இருந்த லோரன்சோ டி மெடிசியின் நம்பிக்கையினை பெற்றுக்கொள்வதேயாகும் ஏனெனில் இருபத்து ஆறாவது அத்தியாயத்தில் 'இதுவரையிலும் இத்தாலியினை ஒன்றினைத்து வல்லமை மிக்க தேசமாக மாற்றுவதற்குரிய இளவரசன் ஒருவனை பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பு துரதிஸ்டவசமாக தடைபட்டுள்ளது ஆனால் தற்போது லோசன்சோ டி மெடிசி இத்தாலியின் சிறந்த நம்பிக்கைக்குரிய ஒருவராக உள்ளார், இவர் இளவரசனில் குறிப்பிடப்படுகின்ற சிறந்த மனிதர்களை பின்பற்றுவாரேயானால் இத்தாலியின் மீட்சி தடுக்கப்பட முடியாததாகும் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த புத்தகம் மெடிசியினால் சரியாக உள்வாங்கிக்கொள்ளப்படவில்லை, அடுத்து வந்த மூன்றறை நூற்றாண்டுகளாக இத்தாலி ஒருமைப்படுத்தப்படவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. தொடர்;ந்து வந்த ஆட்சி மாற்றத்தில் குடியரசு ஆட்சி அமைக்கப்பட்டபோது அதில் பதவியினை பெற்றுக்கொள்வதற்கு மாக்கியவல்லி முயற்சித்தமை அவருடைய சொந்த மோசமான மனநிலையினையும் புத்தியினையும் வெளிப்படுத்துவதாக

உள்ளதுடன் பொதுத்தளத்தில் மக்களும், ஆட்சியாளர்களும் எப்போதும் நேர்மையான வழிமுறையில் செயற்படுவதற்கே விரும்புகின்றனர் என்பதனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

## துணைநூல்பட்டியல்


[1] Benner, E. *Machiavelli's Prince – A New Reading.* USA: Oxford University Press, 2013

[2] Berridge, G.R., Keens-Soper, M., Otter, T.G. *Diplomatic Theory from Machoavelli to Kissinger.* USA: Palgrave Publications, 2001

[3] Bird, C. *An Introduction to Political Philosophy.* USA: Cambridge University Press, 2006

[4] Knowles, D. *Political Philosophy.* England: Routledge Publications, 2001

[5] Machiavelli, N. *The Prince* (H.C.Mansfield, Trans.). USA: The University of Chicago Press, 1998

[6] Vacano. D.A. *The Art of Power – Machiavelli, Nietzsche, and the Making of Aesthetic Political Theory.* USA: Lexongton Books, 2007

[7] Zuckert, C.H. *Machiavelli's Politics.* USA: The University of Chicago Press, 2017

[8] நாராயணன். க. அரசியல் சிற்பிகள். இந்தியா: மாரி பதிப்பகம், 2003

[9] பாஸ்கரன். ச. அரசியல் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும். கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 2019


நிதிசார் கட்டுரையாளர்உறுதிமொழி/ Author Contribution Statement: இல்லை / Nill
கட்டுரையாளர்நன்றியுரை/ Author Acknowledgement: இல்லை / Nill
கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என உறுதிமொழி அளிக்கின்றேன் / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work